# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2017.02.20

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 06/2017**

பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**பொதுவான பதவி உயர்வின் ஊடாக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - I (மருத்துவம் /பல் மருத்துவம்)- அல்லாத பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை**

1997.11.21 ஆம் திகதிய 721 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையில் பதவி இலக்கம்: 11 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I (பொதுவான பதவி உயர்வின் ஊடாக) பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை, 2012.10.09 ஆம் திகதிய 996 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II (மருத்துவம் / பல் மருத்துவம் அல்லாத) பதவியுடன் தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் 2015.09.04 ஆம் திகதிய 11/2015 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை என்பவற்றின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. 721 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையில் பதவி இலக்கம்: 11 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I (மருத்துவம் / பல் மருத்துவம்)- அல்லாத பதவிகளுக்கு பதவி உயர்த்துவதற்குத் தேவையான தகைமைகளைத் திருத்தியமைப்பதற்கு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு 2017.02.02 ஆம் திகதி கூடிய தனது 958 ஆவது கூட்டத் தொடரின்போது தீர்மானித்துள்ளது.

03. **இணைப்பு I** இல் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பதவி உயர்வின் ஊடாக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I (மருத்துவம் / பல் மருத்துவம்)- அல்லாத பதவிகளுக்கான திருத்தியமைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை 2017.02.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

04. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு இதனை குறிப்பிட்ட கல்விசார் ஆளணியைச் சேர்ந்தவர்களின் கவனத்திற்கு கொண்டு வரவும்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.

12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள் /சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள்/ உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/3/106

**11. பதவி மற்றும் சம்பளக் குறியீடு**

சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I (மருத்துவம் / பல் மருத்துவம்)- அல்லாத

U-AC 3 (1)

**ஆட்சேர்ப்பு நடைமுறை**

பொதுவான பதவி உயர்வு ஊடாக

**தகைமைகள்**

சம்பள அளவுத் திட்டத்தில் உச்சப் பெறுமதியில் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்துள்ள அல்லது அத் தரத்தில் ஆறு (06) வருட காலத்தைப் பூர்த்தி செய்துள்ள தரம் II சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி உயர்வுக்காக கவனத்திற் கொள்ளப்படலாம்.

அல்லது

விரிவுரையாளர் (நன்னடத்தை / பயிலுனர்) (மருத்துவம் / பல் மருத்துவம்)- அல்லாத பதவியில் நியமிக்கப்பட்ட திகதி முதல் 11 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள தரம் II சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி உயர்வுக்காக கவனத்திற் கொள்ளப்படலாம்.

**செய்முறை**

விண்ணப்பதாரி தரம் II சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியில் நியமிக்கப்பட்ட திகதி முதல் கீழ் குறிப்பிடப்படும் துறைகளில் அவரால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பினை எடுத்தியம்பும் சுய மதிப்பீடு ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

**கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவைப் பகிர்ந்துகொள்ளல் மற்றும் ஏனைய பல்கலைக்கழகச் செயற்பாடுகள்**

பொது நிர்வாக (செனட்) சபையினால் நியமிக்கப்படும் சபையினால் மேற்குறிப்பிடப்பட்ட சுய மதிப்பீடு, மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டு பரிந்துரை முன்வைக்கப்படும். சபையானது குறிப்பிட்ட பீடத்தின் பீடாதிபதி, குறிப்பிட்ட கற்கைப் பிரிவின் தலைவர் மற்றும் குறிப்பிட்ட விடயம் சார்ந்த துறை பற்றிய அறிவு அல்லது அதனுடன் இணைந்த துறை பற்றிய அறிவைக் கொண்ட ஒருவர் மற்றும் செனட்டினால் நியமிக்கப்படும் வேறு பீடங்களைச் சேர்ந்த இருவர் ஆகியோரை உள்ளடக்கியதாக இருக்கும்.

---